28.01.2017

தினமணி

**சென்னையில் தக்காளி விலை திடீர் உயர்வு**



சென்னையில் கடந்த சில நாள்களுக்கு முன்பு சில்லறை விற்பனையில் கிலோ ரூ.15-க்கு விற்பனையான தக்காளி தற்போது ரூ.30-ஆக அதிகரித்துள்ளது. சென்னையில் கடந்த நவம்பர் மாதம் முதல் ஜனவரி 24 -ஆம் தேதி வரை, ஒரு கிலோ தக்காளி மொத்த விலையில் ரூ.8 முதல் ரூ.15 வரை விற்பனையானது. 15 கிலோ கொண்ட ஒரு பெட்டி தக்காளி ரூ.180-க்கும், 2-ஆவது ரகம் ரூ.140-க்கும் விற்பனையானது.

இந்த நிலையில், கோயம்பேட்டில் வெள்ளிக்கிழமை மொத்த விலையில் ஒரு கிலோ தக்காளி ரூ.25-க்கு விற்கப்பட்டது. அதேபோன்று ஒரு பெட்டி (முதல் ரகம்) ரூ.320-ஆக விலை அதிகரித்து காணப்பட்டது. இதனால் சில்லறை விற்பனையில் தக்காளி விலை ரூ.30-ஆக உயர்ந்தது. இதுகுறித்து கோயம்பேடு வியாபாரிகள் சௌந்தரராஜன், தியாகராஜன் ஆகியோர் கூறுகையில், "வழக்கமாக நாள்தோறும் 85 லாரிகளில் 1,300 டன் வரை தக்காளி விற்பனைக்காக கொண்டு வரப்படும். தற்போது தக்காளி சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் விளைச்சல் 25 சதவீதம் வரை குறைந்துள்ளது. இதனால் கடந்த சில நாள்களாக 50 முதல் 55 லாரிகளில் 800 டன் தக்காளி மட்டுமே கொண்டு வரப்படுகின்றன. இதனால் அதன் விலை அதிகரித்துள்ளது' என்றனர்.

அதேபோன்று சில்லறை விலையில் கடந்த வாரம் ரூ.10 -க்கு விற்கப்பட்ட தேங்காய் தற்போது ரூ.20 -க்கும், ரூ.25 -க்கு விற்கப்பட்ட அவரை ரூ.35 ஆகவும் விலை உயர்ந்துள்ளது.

**கோயம்பேடு சந்தையில் வெள்ளிக்கிழமை நிலவரப்படி சில்லறை விற்பனையில் காய்கறி விலை நிலவரம் (ஒரு கிலோ ரூபாயில்)**

| | | | |
|---|---|---|---|
| தக்காளி | 30 | பாகற்காய் | 30 |
| பெரிய வெங்காயம் | 24 | உருளைக்கிழங்கு | 20-30 |
| பீட்ரூட் | 15 | காலிபிளவர் | 25 |
| கேரட் | 25 | தேங்காய் | 18 |
| பச்சைப்பட்டாணி | 45 | வெண்டைக்காய் | 20-25 |
| கத்தரிக்காய் | 15-20 | அவரை | 35 |
| புடலை | 25 | முருங்கைக்காய் | 100 |

**பெய்து வரும் கனமழையால் சம்பா சாகுபடி பாதிப்பு: விவசாயிகள் வேதனை**



விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் சம்பா சாகுபடி பாதிக்க வாய்ப்புள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர். வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்தத் தாழ்வு நிலையால், கடலூர் மாவட்டத்தில் புதன்கிழமை முதல் பரவலாக மழை பெய்து வருகிறது. தொடர்ந்து, வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை மழை பெய்தது. குறிஞ்சிப்பாடி, விருத்தாசலம் பகுதியில் பெய்த பலத்த மழை காரணமாக, 200க்கும் மேற்பட்ட கிராமங்களில் மோட்டார் பைப்புகள் மூலம் தண்ணீர் இறைத்து பயிரிடப்பட்ட நெல், மணிலா, உளுந்துப் பயிர்கள் நீரில் மூழ்கின. திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர், மன்னார்குடி, நன்னிலம், குடவாசல்

உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பலத்தமழை பெய்து வருகிறது. நடப்பாண்டில் தண்ணீர் இன்றி சம்பா பயிர்கள் முழுவதும் பாதித்த நிலையில் மோட்டார் பைப்புகள் மூலம் தண்ணீர் இறைத்து பயிரிடப்பட்ட பயிர்கள், கனமழையால் முழுமையாக பாதிக்கப்படும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். மேலும் உளுந்து பயிர் சாகுபடியும் முழுவதுமாக பாதிக்க வாய்ப்புள்ளதாகவும் விவசாயிகள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.